# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 05.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு. ச.த. தமிழ்குமார், B.A., B.L.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

**வழக்கு எண். SA 3223/F/2019**

**திரு. ப. நித்தியானந்தன் ... மேல்முறையீட்டாளர்**

**எதிர்**

**பொதுத் தகவல் அலுவலர்.**
**தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக**
**ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி,**
**திருவள்ளூவர் இல்லம், பல்லவன் சாலை,**
**சென்னை – 600 002. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை :**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 20.02.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் – பிரிவு 19(1) | 20.02.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு – பிரிவு 19(3) | 04.04.2019 |

******

**ஆணை**

**இவ்வாணையத்தில் இன்று (05.09.2019) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு. ப. நித்தியானந்தன், சேலம் மாவட்டம் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் தனது 22.08.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக, தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்றும், தான் கோரிய தகவல்களை 7வது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி Commutation and Pension ஆகியவற்றினை தனக்கு பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் கோரியுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி. D. உமாமகேஸ்வரி, பொதுத் தகவல் அலுவலர். / கண்காணிப்பாளர், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி, திருவள்ளூவர் இல்லம், பல்லவன் சாலை, சென்னை அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.**

**2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 20.02.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், தான் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக கழகம், சேலம் தலைமையலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து கடந்த ஜனவரி 2018 அன்று ஒய்வு பெற்றதாகவும், தனக்கு 1.10.2016 அன்று அமுல்படுத்தப்பட்ட 7வது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி Commutation and Pension ஆகியவற்றினை தனக்கு பெற்றுத்தருமாறு, பொதுத் தகவல் அலுவலர். / கண்காணிப்பாளர், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி, திருவள்ளூவர் இல்லம், பல்லவன் சாலை, சென்னை அவர்கள் பல்வேறு தகவல்களை கேட்டு பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சென்னை அவர்களுக்கு ஒன்றை விண்ணப்பித்துள்ளார்.**

**3. மேல்முறையீட்டாளரின் மீண்டும் ஒரு மேல்முறையீட்டு மனுவினை 20.02.2019 தேதியிட்டு, பிரிவு 19(1)ன் கீழ் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்**

(சேலம் ) வரை, சேலம் மாவட்டம் அவர்களுக்கு தகவல் வழங்கும்பொருட்டு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 18.03.2019 மற்றும் 26.03.2019 தேதிகளில் தகவல் வழங்கியுள்ளார். திருப்தியளிக்காத நிலையில், தான் கோரிய தகவல்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு கேட்டு. 04.04.2019 தேதியிட்டு, பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவில், தான் கோரிய தகவல்களுக்கு உரிய விசாரணை நடத்தி தான் கோரிய தகவல்களைப் பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் கோரியுள்ளார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக 18.03.2019 மற்றும் 26.03.2019 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களுக்கு உரிய பதில் அளித்துள்ளதாகவும், மேலும், அவர் கோரிய தகவல்களுக்கு உரிய விரிவான பதிலினை மேல்முறையீட்டாளருக்கு அளிப்பதற்காக கொண்டுவந்திருப்பதாக தெரிவித்து அதற்குரிய ஆவணங்களை ஆணையதின் முன்பு சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் அளித்த ஆவணங்களை ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளர் தனது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர் அவர்களால் 18.03.2019 மற்றும் 26.03.2019 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக பதில் அளித்துள்ளதாகவும், மேலும், அது தொடர்பான விரிவான பதிலினை மேல்முறையீட்டாளருக்கு அளிப்பதற்காக கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தார். ஆனால் இன்றைய விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், அது தொடர்பான விரிவான அறிக்கையினை அளிக்குமாறு இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு கீழ்க்கண்ட உத்தரவினை ஆணையம் பிறப்பிக்கின்றது :-

" மேல்முறையீட்டாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன்படி தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர் இருக்கின்ற ஆவணங்களின் அடிப்படையில் விரிவான அறிக்கை ஒன்றினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 நாட்களுக்குள் தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி உரிய சான்றொப்பமிட்டு மேல்முறையீட்டாளருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, அதனை மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து, ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

(ஒம்/-) (ச.த. தமிழ்குமார்)
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்_

வழக்கு எண்.SA 3223/F/2019
பொது அதிகார அமைப்பு
பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்.
தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக
ஊழியர்கள் ஒய்வூதிய நிதி பொறுப்பாட்சி,
திருவள்ளூவர் இல்லம், பல்லவன் சாலை,
சென்னை – 600 002.

மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்
திரு. ப. நித்தியானந்தன்,
எண்.239/1, கம்பர் தெரு, CSI பாலிடெக்னிக் பின்புறம்,
சின்னதிருப்பதி அஞ்சல், சேலம் . 636 008.

**Copy to: Judgement File / Spare**
**NA/Sr.PS/17.9.2019**